பக்கங்கள் : 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23

ஒலி 316 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 14 திங்கட்கிழமை (31.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### சனநெரிசலில் சிக்கி

## இலங்கையர் உட்பட 153 பேர் உயிரிழப்பு

### தென் கொரியாவில் சோகம்

(சியோல்)

தென் கொரியாவின் தலைநகர் சியோலில் ஹாலோவீன் கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட சனநெரிசலில் சிக்கி இலங்கையர் ஒருவரும் உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

உயிரிழந்த குறித்த இலங்கையர் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 11

## போதை மாத்திரை விற்பனையுடன் மேலும் சில மருத்துவர்களுக்கு தொடர்பு

### விசாரணையில் அம்பலம்

(வவுனியா)

வவுனியாவில் உள்ள பல மருந்தகங்களுக்கு உயிர்கொல்லி போதை மாத்திரை விற்பனையுடன் தொடர்புள்ளமை தெரியவந்துள்ளதுடன், சில மருந்தகங்கள் ஏற்கனவே சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள மொத்த தனியார் மருந்துகள் விற்பனை செய்யும் நிலையத்திலிருந்து வவுனியாவைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் பெருமளவு உயிர்கொல்லி போதை மாத்திரைகள் கொள்வனவு செய்தமை அம்பலமாகியிருந்தது.

இதனைத் தொடர்ந்து மருத்துவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இதன்போது வவுனியாவில் உள்ள வேறு சில மருத்துவர்கள் மற்றும் மருந்தகங்களுக்கு போதைப் பொருள் விற்பனை செய்தமை தெரியவந்துள்ளது.

அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (4)

# சிறையில் உள்ள ஏனைய அரசியல் கைதிகளையும் விடுவிக்க நடவடிக்கை

### யாழில் நீதியமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

நீண்ட காலமாக சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ யாழில் சந்தித்து கலந்துரையாடினார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)



## அமைச்சர்களுக்கு பயணக்கட்டுப்பாடு

(கொழும்பு)

இம்முறை பாதீடு விவாதத்தின் போது, அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி செயலகம் பயணக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதன்படி, பாதீடு மீதான விவாதம் எதிர்வரும் டிசம்பர் 8 ஆம் திகதி வாக்கெடுப்புடன் முடிவடையும் வரை, அனைத்து அமைச்சர்களும் உத்தியோகபூர்வ அல்லது தனிப்பட்ட பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என அறிவிக்கப் 11

## மது அருந்துவோர் வடக்கில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் மது அருந்துவோர் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மக்கள் எதிர்நோக்கில் வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை துணைக்குழுவின் உறுப்பினர் அமைச்சர் 11

## தவறான முடிவெடுத்த இளைஞன் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெருடாவில் வடக்குப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் 11

## சுமந்திரனின் தனிப்பட்ட தீர்மானத்தால் தமிழ்த் தேசியம் வலுவிழக்கும்

### சட்டத்தரணி தவராசா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலத் தலைமைப் பதவிக்கு தமிழ்த் தேசியம் சாராத ஒருவர் வருவாராயின் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவேன் என தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மத்திய குழு உறுப்பினருமான சட்டத்தரணி கே.தவராசா தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே 11

## எதிர்வரும் சில நாட்களுக்கு மழை தொடரும்

(கொழும்பு)

எதிர்வரும் சில நாட்களுக்கு நாட்டில் மழையுடனான 11

## வீதியால் சென்றவர் மயங்கி விழுந்து பலி

### முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

வீதியில் சென்று கொண்டிருந்த மீன் வியாபாரி மயங்கி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவமொன்று முல்லைத்தீவில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் மீன்களை கொள்வனவு செய்வதற்காக வீதியில் பயணித்துக் 11

## தேநீர், சில உணவுகளின் விலை குறைப்பு

(கொழும்பு)

நாளை முதலாம் திகதி முதல் தேநீர் மற்றும் மேலும் சில உணவு வகைகளின் விலையை 11

## கடல் அலையில் சிக்கி மீனவர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கருநாட்டுக்கேணி கடற்கரையில் கரைவலை தொழில் செய்துவரும் 23 அகவையுடைய தொழிலாளி ஒருவர், கடலில் இழுத்து செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை, கயிறு இழுத்த வேளை கடல் அலையில் இழுத்து செல்லப்பட்டு காணாமல் போயிருந்தார். அவரை தேடும் நடவடிக்கையில் கடற்றொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கான நிதி உதவியை பெற்றுத்தர நாம் தயார் - எதிர்க்கட்சி



(கொழும்பு)

**தேர்தல்களை காலம் தாழ்த்தும் முயற்சிகளை அரசாங்கம் கைவிட வேண்டும். தேர்தலுக்கான தினத்தை அறிவித்தால் நிதி உதவிகளை வழங்க பல நாடுகள் தயாராக உள்ளன.**

**அவ்வாறில்லையெனில் எதிர்க்கட்சி என்ற ரீதியில் எம்மால் நிதி உதவியைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

புதிய வரிதிருத்தச் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்காவிட்டால் அதனை ஆதரிக்க முடியாது என்று தெரிவித்த அவர், தற்போது எதிர்க்கட்சியிடமே பெரும்பான்மைப் பலம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சர்வதேச நாணய நிதியமும் விரைவில் தேர்தலை நடத்துவதே பொருத்தமானது என்று வலியுறுத்தியுள்ளது.

ஆனால் தேர்தல் ஆணைக் குழு இவ்விடயத்தில் மந்தகதியாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.


அரசாங்கம் புதிய வரி திருத்தம் தொடர்பில் எம்முடன் எவ்வித கலந்துரையாடல்களையும் முன்னெடுக்கவில்லை. ஆனால் அதற்கு எமது ஆதரவை மாத்திரம் கோருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இரகசிய பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து, அரசாங்கம் இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் குறித்து வெளிப்படுத்துமாறு பல சந்தர்ப்பங்களில் கேட்டபோதும், அரசாங்கம் அதற்கு எவ்வித பதிலையும் வழங்கவில்லை.

நாம் ஆதரவு வழங்கியிருக்காவிட்டால் 22ஐ நிறைவேற்றியிருக்க முடியாது. பொதுஜன பெரமுன நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு கொண்டு சென்றமையே இந்த வரி அறவீட்டுக் கொள்கைக்கான பிரதான காரணியாகும். எனவே இதனை எம்மால் ஆதரிக்க முடியாது. புதிய வரி திருத்தம் தொடர்பில் எம்முடன் கலந்துரையாடாவிட்டால் அதற்கு எதிராகவே வாக்களிப்போம்.

தேர்தல்களை நடத்துவதற்கான உதவிகளை வழங்குவதற்கு பல நாடுகள் முன்வரும். அவ்வாறில்லையெனில் எதிர்க்கட்சி என்ற ரீதியில் எம்மால் நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும். எனவே செலவுகளைக் காரணமாகக் காண்பித்து தேர்தலை பிற்போடும் முயற்சி வெற்றியளிக்காது எனத் தெரிவித்தார். (4)




வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் மற்றும் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றில் நேற்று இடம்பெற்ற சூரன் போர் உற்சவங்கள்.

(படங்கள்:- சிவசாந்தன், கஜிந்தன்)

## மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத் தலைவராக இளஞ்செழியன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் தலைவராக நீதிபதி இளஞ்செழியன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 26ஆம் திகதி போட்டியின்றி ஏகமனதாக அவர் தெரிவு செய்யப்பட்டார்.

குறித்த தலைவர் பதவியைப் பெற்றுக்.கொள்ளும் முதலாவது தமிழர் என்ற பெருமையையும் அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

நீதித்துறையில் கடந்த 25 வருடங்களாக நீதிபதி இளஞ்செழியன் பணியாற்றி வருகின்றார்.

இவர் மேல் நீதிமன்ற நீதிபதியாக வடக்கு - கிழக்கின் பல பகுதிகளில் பணியாற்றியுள்ளார்.

திருகோணமலையில் ஏழரை வருடங்கள், கல்முனையில் ஒன்றரை ஆண்டுகள், யாழ்ப்பாணத்தில் மூன்றரை ஆண்டுகள், வவுனியாவில் ஓராண்டு, மட்டக்களப்பு சிவில் மேல் முறையீட்டு நீதிமன்றில் ஓராண்டு என மொத்த 12 ஆண்டுகள் மேல் நீதிமன்றில் கடமையாற்றுகிறார். (4)

## இரட்டைக் குடியுரிமையுடைய எம்.பிக்களை கண்டறிய விசாரணை

இரட்டைக் குடியுரிமை கொண்ட எம்.பிக்கள் தொடர்பில் கண்டறிய அரசாங்கத்தின் புலனாய்வுப் பிரிவினர் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணையின் பின்னர் விரைவில் ஆரம்பகட்ட அறிக்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரட்டைக் குடியுரிமையுடன் சுமார் பத்து எம்.பிக்கள் உள்ளனர் என்பதை உறுதிப்படுத்தவே இந்த விசாரணை தொடங்கப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாராளுமன்றத்தினால் குறிப்பிடப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிறந்த திகதி, பெயர் மற்றும் தேசிய அடையாள இலக்கம் அடங்கிய ஆவணத்தின் அடிப்படையில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

குடிவரவு, குடியகல்வு திணைக்களம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க பாராளுமன்றம் இந்த ஆவணத்தை முன்வைத்துள்ளது. (4)


**யா/ கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம்**

**பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்**

காலம் - 2022.11.06 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணி
இடம் - பாடசாலையின் பிரதான மண்டபம்

அனைத்து பழைய மாணவர்களையும்
தவறாது கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்

(13304)

**ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 07.02.1944
மறைவு 31.10.2016

**அமரர் சின்னப்பு பத்மநாதன்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

திதி : வளர்பிறை பிரதமை
(26.10.2022)

ஆண்டுகள் ஆறு ஆனபோதிலும்
உங்கள் நினைவுகள் எம் மனதில்
ஓயாத அலைகளாய் ஒவ்வொரு நாளும்
அலை மோதுகின்றன
எங்கள் உயிர் மூச்சுள்ள வரை
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"மிதிலா"
[illegible]
புலோலி தென்மேற்கு,
புலோலி.

(13307)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண லயன்ஸ் கழகங்களும் யாழ். விழிப்புணர் வற்றோர் சங்கமும் இணந்து நடத்திய வெள்ளைப்பிரம்பு தினமும் விழிப்புணர்வு ஊர்வலமும் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. (படம்-கஜிந்தன்)

# அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் குறைவடையும்

## வர்த்தக அமைச்சர்

**(கொழும்பு)**

**இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் பகிரங்க கணக்கு முறைமைக்கு அமைவாக, அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக் கப்பட்டிருப்பதனால் பொருட்களின் விலை குறைவடை ந்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**



இதேபோன்று எதிர் வரும் பண்டிகைக் காலத்தில் மக்களுக்குத் தட்டுப் பாடின்றி அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

பண்டிகைக் காலத்தில் பொருட்களின் விலை மேலும் குறைவடையும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# அச்செழுவில் 18 வீடுகள் பயனாளிகளுக்கு கையளிப்பு



(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் அச்செழுப் பகுதியில் இராஜேஸ்வரி அன்புச்சோலை எனும் பெயரில் புதிதாக அமைக்கப்பட்ட 18 வீடுகள் நேற்றைய தினம் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

இராஜேஸ்வரி அறக்கட்டளையின் உரிமையாளர் செ.திருமாறனின் நிதியுதவியில் 2021 ஆம் ஆண்டு வீடுகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் வறுமைக்கோட்டுக் குட்பட்ட கல்வியில் ஆர்வமுள்ள வீடு காணியற்ற வீடு கட்ட இயலாதவர்கள் என தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 18 பேருக்கு புதிதாக கட்டி முடிக்கப் பட்ட வீடுகள் கையளிக்கப்பட்டன. (4-30)

# போதைப்பொருள் பாவனை பெண்கள் மத்தியில் அதிகரிப்பு

(கொழும்பு)

பெண்களிடம் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப் பாட்டு சபையின் மேலதிக ஆலோசகர் லக்மீ நிலங்க தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான பெண்கள் அழுகுக் கலை நிலையங்களின் ஊடாக போதைப் பொருள் பயன்பாட்டில் ஈடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அதிகளவான பெண்களிடம் தற்போது ஐஸ் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது.

குறிப்பாக குருநாகல் மாவட்டத்திலேயே இந்த உயர்வு பதிவாகியுள்ளது. ஆண்களை விடவும் பெண்களுக்கே பாதிப்பு அதிகமாகவுள்ளது.

அழகுக்கலை நிலையங்களின் ஊடாக இந்தப் பழக்கத்துக்கு பெண்கள் அடிமையாகின்றனர்.

அடிக்கடி அழ்குக் கலை நிலையங்களுக்கு செல்லும் தங்களது பிள்ளைகள் குறித்து பெற்றோர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப் பாட்டு சபையின் மேலதிக ஆலோசகர் லக்மீ நிலங்க தெரி வித்துள்ளார். (4)

# சட்டவிரோத மீன்பிடி எட்டு பேர் கைது




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மண்டைதீவு கடற்பரப்பில் கடலட்டை பிடித்த ஏழு பேரையும் தங்கூசி வலையைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட ஒருவரையும் நீதிமன்றில் முற்படுத்த கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடற்படையினர் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களமும் இணைந்து முன்னெடுத்த சோதனை நடவடிக்கையில் கடலட்டை பிடித்து வந்த ஏழு பேர் கடலட்டையுடன் இனங்காணப்பட்டதுடன், தங்கூசி வலையைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட ஒருவர் இனங்காணப்பட்டு அவரது படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் கடற்கரையோரமாக இருந்த தங்கூசி வலையும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டது. குறித்த எட்டுப் பேரையும் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்த கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (4-104)

# குண்டு மீட்பு



(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் ஜே/44 கிராம உத்தியோகத்தர் பிரிவில் குண்டு ஒன்று நேற்று முன்தினம் அடையாளங் காணப்பட்டுள்ளது.

காணியில் உரிமையாளர் குறித்த பகுதியில் வீடு கட்டுவதற்காக அத்திவாரம் வெட்டிய வேளை குழியில் இருந்து குறித்த குண்டு வெளிப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு குறித்த குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

# மூன்று தினங்கள் காய்ச்சல் நீடித்தால் சிகிச்சை பெறுக

## மருத்துவர் அறிவுறுத்து

(கொழும்பு)

மூன்று தினங்கள் தொடர்ந்து காய்ச்சல் நீடிக்குமானால் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு களுவாஞ்சிக்குடி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகபதில் சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் ஞா.சஞ்ஜய் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை தற்போது மழையுடன் கூடிய காலநிலை ஏற்பட்டுள்ளதன் காரணமாக டெங்கு நுளம்பினை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)



பருத்தித்துறை கடற்பரப்பில் கருமேக மூட்டத்தால் ஒரு வகை சூறாவளி காற்று மூலம் கடல் நீர் உறிஞ்சப்படும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.
(படம்-மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்து அணியிடம் இலங்கை படுதோல்வி



இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின், சுப்பர் 12 குழு 1 இல் நடைபெற்ற தொடரின் 27ஆவது போட்டியில், நியூஸிலாந்து அணி 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

சிட்னி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நியூஸிலாந்து அணியும் இலங்கை அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 167 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக க்ளென் பிலிப்ஸ் 104 ஓட்டங்களையும் டேரில் மிட்செல் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை அணியின் பந்து வீச்சில், ராஜித 2 விக்கெட்டுகளையும் தீக்ஷன, தனஞ்சய, ஹசரங்க மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.


இதனைத்தொடர்ந்து 168 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி, 19.2 ஓவர்கள் நிறைவில் 102 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனால், நியூஸிலாந்து அணி 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, தசுன் சானக 35 ஓட்டங்களையும் பானுக ராஜபக்ஷ 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 64 பந்துகளில் 4 சிக்ஸர்கள் மற்றும் 10 பவுண்டரிகள் அடங்கலாக, 104 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட க்ளென் பிலிப்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (4)

# பளுதூக்கல் போட்டியில் சாதனை படைத்த யாழ்ப்பாண இளைஞன்



தேசிய ரீதியான பளுதூக்கல் போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் புதிய சாதனைகளை படைத்துள்ளார்.

தேசிய ரீதியில் நேற்று முன்தினம் கொழும்பு தனியார் விடுதியில் இடம்பெற்ற போட்டியில் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 56 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து சென்ற, யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியை சேர்ந்த ச. புசாந்தன் கலந்து கொண்டுள்ளார்.

அவர் மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் மூன்றிலும் வெற்றி பெற்று, மூன்று தங்க பதக்கங்களை பெற்றுக்கொண்டார்.

குறித்த போட்டியில் மொத்தமாக 793 கிலோ கிராமை தூக்கி புதிய சாதனையையும் நிலை நாட்டியுள்ளார்.

அத்துடன் ச.புசாந்தன் வருகின்ற டிசெம்பர் மாதம் நியூசிலாந்தில் நடைபெறுகின்ற சர்வதேச பளுதூக்கல் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2719

**தர்மன்**

மேக்கப் பண்ணினாதான் பொண்ணுங்க நல்லா இருப்பாங்க.
பிறேக் அப் பண்ணாதான் பசங்க நல்லா இருப்பாங்க.



சும்மா கொழுத்திப் போடுவோம்.

**கவிதா**



என்னங்க முதலாளி இன்னமும் கம்முனே இருக்கிங்க, ஆத்தி! இவன் இன்னைக்கு தீபாவளி போனஸ் வாங்காம போகமாட்டான் போல

**குகன்**

சாமி உண்டியலில் வீணாய் பணத்தை போடுறதை விட அநாதை குழந்தைகளுக்கு ஒரு வேளை சோறு போடுங்க உங்க வம்சமே நல்லா இருக்கும்.

**ரக்சிதா**

பொண்டாட்டி என்னைத் திட்டும் போது 'எப்பவும் உங்க அம்மா பேச்சைத் தான் கேட்பீங்களா?'



என் மகனைத் திட்டும் போது 'அம்மா பேச்சைக் கேட்கமாட்டாயா?'

**கலைவாணி**



ஒருவருடைய குறைகள் மட்டுமே உன் கண்களுக்கு தெரியுமானால் நீ அவர்களை பார்க்கும் கோணம் தவறு என்பதைப் புரிந்துகொள்

**சந்தியா**

நம்மை யார் என்று நமக்கே தெரியப்படுத்த தேவைப்படும் ஆயுதம் தான் 'அவமானம்'



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களுக்கு இன்றும் அதிகார பேராசை-சரத் பொன்சேகா

(கொழும்பு)

நாட்டு மக்கள் தற்போது அனுபவிக்கும் துயரங்களுக்கு தாமே காரணம் என்பதை உணராமல் மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாகக் கூறும் ராஜபக்ஷக்களின் ஆட்சி அமைக்கப்பட்டால் தற்போதுள்ளதை விட கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ஷக்களுக்கு இன்றும் அதிகார பேராசை காணப்படுவதோடு இதுவரை கொள்ளையடித்து, திருப்தியடைய முடியாமலேயே அவர்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெறுவோம் என்று பேசிக்கொண்டிருக்கின்றனர்.

எனினும் அவர்கள் முன்னெடுக்கும் இந்த முயற்சி ஒழுக்கமானதல்ல. இவ்வாறான செயற்பாடுகளுக்கு உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் வரவேற்பிருக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)



# நடத்துநர் இன்றி இயங்கும் அதி நவீன பேருந்து சேவை

(கொழும்பு)

இலங்கையில் நடத்துநர் இன்றி இயங்கும் அதி நவீன பேருந்து சேவையை ஆரம்பிப்பதற்கு போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவிற்கும் தனியார் தொழில்நுட்பக் குழுவிற்கும் இடையில் அண்மையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

கையடக்கத் தொலைபேசி செயலி மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இந்த பொதுப்போக்குவரத்து சேவை தொடர்பில் இந்த கலந்துரையாடலின்போது அறிமுகம் செய்யப்பட்டது.

கொழும்பு கோட்டை, கொம்பனித்தெரு, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, பொரளை, நகர மண்டபம் உட்பட கொழும்பு நகரின் பெரும்பாலான பிரதான நிலையங்களை உள்ளடக்கியதாக இந்த திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பேருந்தில் எவ்வளவு தூரம் பயணித்தாலும் 200 ரூபாய் மாத்திரமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணமாக அறவிடப்படவுள்ளது.

கையடக்கத் தொலைபேசியில் உள்ள செயலி மூலம் கட்டணம் செலுத்தப்படுவதால், இந்த பேருந்துகளுக்கு நடத்துநர் தேவையில்லை என்பது மற்றொரு விசேட அம்சமாகும். (4)

# விபத்து; பொலிஸ் உயிரிழப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்குச் சொந்தமான பேருந்து மோதியதில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா - யக்கல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர். விபத்தை ஏற்படுத்திய பாராளுமன்றத்துக்குச் சொந்தமான பேருந்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஜா - எல பகுதியில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வை முடித்துக் கொண்டு அதில் பங்கேற்றவர்களை வீடுகளுக்கு அழைத்துச் சென்ற போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் சாரதி பொல்கஹாவெல பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(நி)


## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று பணியாற்றுவதற்கு வீட்டுப்பணிப் பெண் தேவை.

இடம்:-தொண்டைமானாறு

தொடர்புகளுக்கு:-

077 616 0320

(13303)

## பணியாளர் தேவை

விமான பயணச்சீட்டு மற்றும் விசா ஆலோசனை நிறுவனத்தில் பணிபுரிய கணனி அறிவுடைய பெண்கள் தேவை. சுயவிபரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.

காலம் - 01.11.2022 காலை 10.00 -2.00 மணிவரை

இடம் - Hybrid international (PVT) LTD
இல.36 வைத்திலிங்கம் துரைசாமி வீதி,
(LIC கட்டடம், வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
யாழ்ப்பாணம். (c-5185)

தொ.பே- 076 2500 098


# வட்டு வடக்குதித்த மனிதருள் மாணிக்கம்

சங்கானை பாக்கியரட்ணம் காட்வெயார் ஸ்ரோர்ஸ் ஸ்தாபகர்
யாழ்ப்பாணம் தரன் ரேடர், JET STELL PVT-Ltd.
அமரர்.உயர்திரு. **வேலுப்பிள்ளை பொன்னம்பலம்**
அவர்களை 11 ஆம் ஆண்டில் நினைவு கூர்வோம்.

மண்ணில்
11 – 10 – 1927



விண்ணில்
02 – 11 – 2011

தொட்டதெல்லாம் பணியெனவே துலங்க இந்த மண் பிறந்து
பட்டி தொட்டி எல்லாமே புகுந்து பல சேவைகள் செய்து
எட்டுகின்ற திசையெல்லாம் கரம்நீட்டித் தோள் கொடுத்து
கொட்டுகின்ற அருவியெனக் கொடை கொடுத்த வள்ளலார்
பிட்டுக்கு மண் சுமந்தார் போலத் துணை நிற்கின்ற
வட்டுநகர் வடித்தெடுத்த வேலுப்பிள்ளை பொன்னம்பலத்தார்
கட்டிக் காத்தவற்றை விட்டிறையை அடைந்தின்று
கிட்டியதோர் பதினோராம் ஆண்டில் நினைவு கூர்வோம்.

பாக்கிய ரத்தின பவனம்,
வட்டு-வடக்கு,
சித்தங்கேணி.

(13295)

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# இராசிபலன்

31.10.2022
ஐப்பசி 14, திங்கட்கிழமை
சஷ்டி காலை 6.12 மணிவரை

சப்தமி பின்னிரவு 3.50 மணிவரை
பூராடம் முற்பகல் 8.52 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை

இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
சந்திராஷ்டமம் -திருவாதிரை

வளவன்


மேஷம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.


கடகம்

உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


மகரம்

இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.


ரிஷபம்

கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், உடல் நலனில் கவனம் தேவை.


சிம்மம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சிறப்பான நாள்.


விருச்சிகம்

குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


கும்பம்

பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், திடீர் பண வரவால் சந்தோசமடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


மிதுனம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், களஸ்திர நன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.


கன்னி

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.


தனுசு

காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு பகல் பாராது அயராது பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.


மீனம்

பெரிய மனிதர்களின் தொடர்புகள், உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

உன்னை விடக் குறைத்து யாரையும் எடைபோட்டு விடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023 ம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## வட மாகாண சபை

வட மாகாண சபைக்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் மாவட்டங்களுக்கு 2023 ம் ஆண்டு காலப்பகுதிக்குரிய பொருட்கள். சேவைகளை வழங்குவதற்கு உள்ளூர் வழங்குநர்களாக பதிவு செய்ய விரும்பும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த வழங்குநர்களிடமிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக விலை குறிப்பிடல் முறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் பொருட்கள் சேவைகளுக்காக இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் **(Rainbow Pages)** பெயர் குறிப்பிடப்படும் வழங்குநர்களிடம் இருந்தும் விலை மனுக்கள் கோரப்படும்.

தொகுதி இல: "G"

| உப தொகுதி இல. | பொருட்கள் - விபரம் |
|---|---|
| G-1 | அலுவலக தளபாடங்கள் |
| G-2 | அலுவலக உபகரணங்கள் |
| G-3 | காகிதாதிகள் |
| G-4 | ரோணர்கள் (Toners), ரிபன்கள் (Ribbion) |
| G-5 | கட்டடப் பொருட்களும் கட்டடப் பிரிவிடுதலும் (partioning) அலங்காரமும் |
| G-6 | புத்தகங்களும், பருவ வெளியீடுகளும் |
| G-7 | மின் உதிரிகள், பொருத்திகள், மின் உபகரணங்கள் மற்றும் தொடர்பு சாதனங்கள் |
| G-8 | அச்சிடும் பொருட்கள் |
| G-9 | கணனிகளும் உதிரிப்பாகங்களும் |
| G-10 | சமூக நலன் பொருட்கள் |
| G-11 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் , மோட்டார் வாகனங்களுக்கான பற்றிகள் |
| G-12 | பொது உபகரணங்களும் வீட்டுப் பாவனைப் பொருட்களும் |
| G-13 | கல்விசார் உபகரணங்கள் |
| G-14 | விளையாட்டு உபகரணங்கள் |
| G-15 | இசைக் கருவிகள் |
| G-16 | சுத்திகரிப்பு பொருட்களும் உபகரணங்களும் |
| G-17 | ஆயுர்வேத / சுதேச மருந்துகள் |
| G-18 | ஆயுர்வேத மருந்துச் சரக்குகளும் பலசரக்குப் பொருட்களும் |
| G-19 | வைத்தியசாலைக்கான மருந்து வகைகள் |
| G-20 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (உலர் உணவு மட்டும்) |
| G-21 | வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவும் குளிர்பானமும், சிற்றுண்டி, பேக்கரி உணவு பொருட்கள் |
| G-22 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (மரக்கறிகள்) |
| G-23 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (பழவகைகள்) |
| G-24 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (இறைச்சி,மீன்,முட்டை) |
| G-25 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (பால்) |
| G-26 | வைத்தியசாலைக்கான துணிகள் வழங்கல் |
| G-27 | வைத்தியசாலை வாயு வழங்கல் (Medical gas) |
| G-28 | வைத்தியசாலை ஆய்வுகூட இரசாயனங்களும் மீள் நிரப்பல்களும் (Reagents) |
| G-29 | வைத்தியசாலை தளபாடங்கள் |
| G-30 | வைத்தியசாலைகளுக்கான ஆடைப்பொருட்களும் மற்றும் சுகாதார தொற்று நீக்கிய துண்டுகளும் |
| G-31 | பல் வைத்திய உபகரணங்கள் |
| G-32 | மருத்துவ உபகரணங்கள் |
| G-33 | விவசாய எந்திரங்கள், எந்திர உபகரணங்களும் அவை தொடர்பான கருவிகளும் |
| G-34 | விவசாய பொருட்கள், உர வகைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்கள் |
| G-35 | விவசாய விதைகள், நடுகைப் பொருட்கள் |
| G-36 | கால்நடைகளின் உணவுகள் மற்றும் ஏனைய பொருட்கள் |
| G-37 | கால்நடைகளுக்கான மருந்துகள் |
| G-38 | தொலைத்தொடர்பு சாதனங்கள் |
| G-39 | இரும்பு பொருட்சாதனங்கள் |
| G-40 | இரசாயனப் பொருட்கள் , ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் |
| G-41 | ஒலி ஒளி உபகரணங்கள் |
| G-42 | மகாநாடு மற்றும் கூட்டங்களுக்கான உணவு வழங்கல் |
| G-43 | மீன்பிடி தொடர்பான பொருட்கள் |
| G-44 | கைத்தொழில் மூலப்பொருட்கள் |
| G-45 | அலங்கார அழகுசாதனப்பொருட்கள் |
| G-46 | வாகனங்களிற்கான ரயர் மற்றும் ரியூப் |
| G-47 | பாதணிகள் |

தொகுதி இல: "S"

| உப தொகுதி இல | சேவைகள் - விபரம் |
|---|---|
| S-1 | கடிதத்தலைப்பு, புத்தகங்கள் வெளியீடுகள் அச்சிடுதல், சுவரொட்டிகள், பதாகைகள் அச்சிடுதல், பெயர் பலகை, குறியீட்டு பலகை எழுத்து பொறித்தல், புத்தகம் கட்டுதல், அச்சு அடிச் சட்டம் (Block) தயாரித்தல், இறப்பர் முத்திரை, திகதி முத்திரை தயாரித்தல். |
| S-2 | அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| S-3 | அலுவலக போட்டோ பிரதி இயந்திரங்கள், ரைப்ரைட்டர்கள், றோனியோ மெசின்கள் மற்றும் மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-4 | கணனிகள், பிறின்டர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-5 | குளிரூட்டிகள், மின் உபகரணங்கள் மற்றும் மின்வயர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-6 | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் |
| S-7 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், கட்டட தளங்கள், கதவுகள், ஜன்னல்கள், திரைச்சீலைகள் சுத்திகரிப்புச் செய்தல் |
| S-8 a or b | அ) வாகனம் பழுது பார்த்தல்:- உள்வாரியான திருத்தங்கள் இயந்திரம் மற்றும் வாகனப்பகுதிகளை பழுது பார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள்<br>ஆ) வாகனம் பழுது பார்த்தல்:- வெளிவாரியான திருத்தங்கள் தகடுகள் (Tinkering) பழுது பார்த்தலும் பெயின்ட் அடித்தலும், |
| S-9 | வாகனம் பராமரித்தல்: கால அட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு (alignment) பரிசீலித்தல், சில்லு சமன் செய்தல், டயர் மாற்றம் செய்தல் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும். |
| S-10 | விவசாய உபகரணங்கள் தயாரித்தல்/வடிவமைத்தல் மற்றும் விவசாய இயந்திரங்கள் உபகரணங்கள் திருத்தம் |
| S-11 | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வாகனங்களை வழங்கல் (Passenger Vehicle) |
| S-12 | வாகனங்களுக்கு டயர் மாற்றம் செய்தல் , காற்று நிரப்புதல் , டயர் ரியூப் ஒட்டுதல்.. |
| S-13 | மர வேலைகள் திருத்தம் (சிறு திருத்தங்கள் ) |
| S-14 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் |
| S-15 | ஒளி மற்றும் ஒலிப்பதிவு (Video and Audio Recording, Sound & Light service) |
| S-16 | புகைப்படப்பிடிப்பு |
| S-17 | தொலைபேசி உபகரண பழுதுபார்த்தல் |
| S-18 | நிலமட்டப்படுத்தல் சேவைகள் |
| S-19 | குசன் வேலைகள், தளவிரிப்புக்கள் மற்றும் தொடர்புடைய உள்ளக வேலைகள் வாகனங்களுக்கும் தளபாடங்களுக்கும்( upholstery works of furniture and vehicles ) |
| S-20 | கனரக வாகனங்கள் வாடகைக்கு வழங்கல் |
| S-21 | குழாய் பொருத்துநர் சேவையும் நீர் வழங்கல் சேவையும் |
| S-22 | கணனி மென்பொருள் வழங்கல் |
| S-23 | நாய்களுக்கான கருத்தடை சேவை (Dog sterilization) |
| S-24 | மருத்துவ உபகரணங்கள் பராமரிப்பும் பழுதுபார்த்தலும் |
| S-25 | தையல் இயந்திரத்திருத்தம் |
| S-26 | அலுமினிய பொருத்துதல் வேலை (Fitting) |

**நியந்தனைகள்**

1. வழங்குநர்களாக பதிவு செய்தல் 2023 ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும்.
2. உள்ளூர் பெறுகைகள் பதிவு செய்த வழங்குநர்கள் பட்டியலிலிருந்தும். விலை குறிப்பிடல் முறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் பொருட்கள் சேவைகளுக்காக இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் பொதுவாக விலை மனுக்கள் கோரப்படும். எனினும் பொருள் கொள்பவருக்கு வேறு மூலங்களிலிருந்தும் விலை மனு கோருவதற்கான உரிமையும் உண்டு.
3. விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை பிரதம செயலாளர் கொண்டுள்ளார்.
5. மனுக்கள் கோரும்போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருட்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6. வியாபார பதிவுச்சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருட்கள். சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
7. வழங்குநர் குறிப்பிட்ட பொருட்கள். சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு தாங்கள் தகுதியற்றவர் என காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
8. பொருட்கள் சேவைகள் விநியோகிப்பதற்கு விருப்பு தெரிவிக்கும் மாவட்டம் / மாவட்டங்கள் வழங்குநர்களால் குறிப்பிடப்படல் வேண்டும்.
9. பழுது பார்த்தலுக்கோ. வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள். சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விபரங்களும் பயிற்சி பெற்ற வேலையாட்களின் விபரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்). தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.
10. வடமாகாணத்தில் குறைந்தது ஓர் இடத்திலேனும் தங்கள் நிறுவனத்தின் ஒரு கிளை(Branch) /ஒரு காட்சி அறை/முகவர் / அங்கீகரிக்கப்பட்ட முகவர் (Authorized Dealer) ஆகியவற்றில் ஏதாவது ஒன்றையேனும் வைத்திருத்தல் வேண்டும்.
11. வழங்குநர்களுக்கு பெறுகைகளுக்கான காசு முற்பணம் வழங்கப்படமாட்டாது.
12. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் (பிரதேச செயலகம்) வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியுடனும் (மாநகர சபை/ நகர சபை/ பிரதேச சபை) வரிப்பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் மீளளிக்கப்படாத வைப்புப் பணச்சீட்டையுடனும் 2022 நவம்பர் மாதம் 30 ம் திகதி அல்லது அதற்கு முன்பதாக "பிரதிப்பிரதம செயலாளர் (நிதி). மாகாணத்திறைசேரி. மாகாண சபை வளாகம். A9 வீதி, கைதடி , யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023 ம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்" என குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
13. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்படவேண்டிய ஒவ்வொரு உப பொருட் தொகுதிக்கும். சேவைக்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா.500.00 க்கான காசுக்கட்டளை "பிரதிப்பிரதம செயலாளர்- நிதி. வட மாகாணம்." என்ற பெயரில் யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் மாற்றக்கூடியவாறு பெறப்பட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது மாகாண சபை வளாகம். A9 வீதி. கைதடி . யாழ்ப்பாணம். எனும் முகவரியில் இயங்குகின்ற மாகாணத்திறைசேரி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை நேரடியாகப் பணத்தினைச் செலுத்திப் பெறுகின்ற பற்றுச் சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உப பொருட்கள் அல்லது உப சேவைகளின் தொகுதிக்கு பதிவு கோருவதாயின், ஒவ்வொரு உப பொருட் தொகுதிக்கும் அல்லது சேவைகளுக்கும் தனித்தனி விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத வைப்பு பணம் ரூபா 500.00 ம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
14. 2022 நவம்பர் மாதம் 30 ம் திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
15. விண்ணப்படிவங்களை வடமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான **www.np.gov.lk** இல் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.
16. மேலதிக விளக்கங்களுக்கு கணக்காளர். மாகாணத்திறைசேரி. வட மாகாணம் அவர்களுடன் தொலைபேசி இல 0212213540 மூலம் தொடர்பு கொள்ளமுடியும்.

**பிரதம செயலாளர்,**
**வட மாகாண சபை, மாகாணசபை வளாகம்,**
**A9 வீதி, கைதடி,யாழ்ப்பாணம்.**

(சி-5183)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Official Use Only | |
|---|---|
| | |

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**2023 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்**

**வட மாகாண சபை**

1. வியாபார நிறுவனத்தின் பெயர் :-....................................
2. வியாபார நிறுவனத்தின் முகவரி :-....................................
3. வியாபார நிறுவனத்தின் வடமாகாணத்திற்கு உட்பட்ட முகவரி :-......................
3. 1வியாபார நிறுவனத்தின் கிளை/ காட்சி அறை/முகவர்/அங்கீகரிக்கப்பட்ட முகவர் (Authorized Dealer) முகவரி.-............................................
4. தொலைபேசி இலக்கம்
   நிலையானது (Land) :-....................................
   கைத்தொலைபேசி (Mobile) :-....................................
5. தொலைநகல் (Fax) இலக்கம் :-....................................
6. மின்னஞ்சல் முகவரி :-....................................
7. வியாபார பதிவு இலக்கம் :-....................................
(வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
8. வியாபாரத்தின் தன்மை :-.........................................
9. வியாபார அனுமதிப்பத்திரத்தினை வழங்கிய நிறுவனத்தின் பெயர் (மாநகர சபை/நகர சபை/ பிரதேச சபை) (வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்):- ..........................................
10. வற் (VAT) வரி பதிவு இலக்கம் (இருப்பின்) (வற் (VAT) வரி பதிவு பத்திரத்தின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்) :-................................................
11. பதிவு செய்யப்படவேண்டிய பொருட்கள் / சேவைகளின் தொகுதி :-

| தொகுதி இல | பொருட்கள் / சேவைகள் விபரம் |
|---|---|
| | |
| | |

12. கணக்கினை பேணும் வங்கிகளின் பெயர்கள்:-....................................
13. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி
    (Credit Period) :-....................................
14. வழங்கல் செய்யக்கூடிய மாவட்டங்களின் பெயர்கள் :-
    (விண்ணப்பதாரி வழங்கல் செய்யக்கூடிய மாவட்டம்/ மாவட்டங்களினை "✓" அடையாளத்தினை இடுவதன் மூலம் தெரிவுசெய்தல் வேண்டும்)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | |
| வவுனியா | |
| மன்னார் | |
| கிளிநொச்சி | |
| முல்லைத்தீவு | |

என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும் வட மாகாணசபை பிரதம செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறேன். பதிவுக் கட்டணம் ரூபா.500.00 ற்கு ..............ம் திகதிய ..............இலக்க காசுக் கட்டளை/ பற்றுச்சீட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

.............................. .............................. ..............

விண்ணப்பதாரியின் ஒப்பம் விண்ணப்பதாரியின் பெயர் திகதி

# பெரமுனவின் அழுத்தங்களால் தவறான பாதையில் ரணில்

## மைத்திரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் பரந்த கூட்டணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



இலங்கை மகளிர் சங்கம் மற்றும் இலங்கை இளைஞர் சங்கம் ஆகியவற்றின் பொதுச் சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி பொதுஜன பெரமுன கட்சியின் அழுத்தங்களுக்கு உள்ளாகி சரியாக பயணிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டுள்ளார். (4)

# ஜனாதிபதி மாளிகையை சீரமைக்க 36 கோடி ரூபாய் செலவு

(கொழும்பு)

கடந்த ஜூலையில் மக்கள் போராட்டத்தின் போது சேதமடைந்த ஜனாதிபதி மாளிகையின் திருத்தப்பணிகளுக்கு சுமார் 36 கோடி ரூபாய் செலவாகும் என அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மதிப்பிட்டுள்ளது.

இந்த திருத்தப்பணிகள் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளதாக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல் கட்டத்தின் கீழ், அரசாங்கத்தின் முக்கிய செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய வகையிலும் பிற விசேட நிகழ்வுகளை நடத்துதற்கு தகுந்த வகையிலும் ஜனாதிபதி மாளிகையின் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்படும்.

அதேவேளை, இரண்டாவது கட்டத்தின் கீழ், மாளிகையின் தங்குமிடங்கள் மற்றும் அலுவலக அறைகள் புனரமைக்கப்படவுள்ளன. இந்த புனரமைப்பு பணிகளுக்கு அரசாங்கத்தின் பொது நிதி பயன்படுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (4)



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

**கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 111**

**உக்ரைன் நெருக்கடி: அணு ஆயுதத்தை எடுக்குமா ரஷ்யா? என்ற கேள்விக்குப் பதில் காண்பது கடினம்**

**உலகில் எந்த நாட்டிடம் எத்தனை அணு ஆயுதங்கள் உள்ளன?**

உக்ரைனில் நிலவும் நெருக்கடிக்கு மத்தியில் அணு ஆயுதங்கள் உட்பட தனது எதிர்ப்புத்திறன்களை "சிறப்பு உஷார் நிலையில்" வைக்குமாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ரஷ்ய இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளார். மேற்கத்தேய நாடுகளின் ஆக்ரோஷமான அறிக்கைகள் அவ்வாறு செய்ய வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தியதாக புடின் தனது பாதுகாப்புத்துறை தலைவர்களிடம் கூறினார்.

ரஷ்யா அணு ஆயுதங்களை பயன்படுத்த விரும்புகிறது என்ற அவரது அறிவிப்புக்கு அர்த்தம் இல்லை. ஆனால், அவரது அறிவிப்பு உலகில் அணு ஆயுதங்கள் பற்றிய விவாதத்தை ஆரம்பித்துள்ளது.

பனிப்போர் காலத்திற்குப்பிறகு அணு ஆயுதங்களின் கையிருப்பு வெகுவாகக் குறைந்திருந்தாலும், மிகக் குறுகிய காலத்திற்குள் பயன்படுத்தக்கூடிய நூற்றுக்கணக்கான அணு ஆயுதங்கள் இன்னும் உலகில் உள்ளன.


**அணு ஆயுதங்கள் என்றால் என்ன?**

இவை மிகவும் சக்திவாய்ந்த வெடிபொருட்கள் அல்லது குண்டுகள் ஆகும். இந்த குண்டுகள், அணுவின் அணு அல்லது அணுக்கருதுகள்களை பிளப்பது அல்லது இணைப்பது மூலம் தங்கள் சக்தியைப் பெறுகின்றன. இது அறிவியல் மொழியில் இணைவு அல்லது பிளவு என்று அழைக்கப்படுகிறது.

அணு ஆயுதங்களின் பயன்பாடு பெரிய அளவிலான ரேடியேஷன் அதாவது கதிர்வீச்சை வெளியிடுகிறது. எனவே, அவற்றின் விளைவு வெடிப்புக்குப் பிறகு மிக நீண்ட காலத்திற்கு நீடிக்கும்.

**அணு ஆயுதங்கள் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளனவா?**

1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6 அன்று ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தின் மீதும், ஓகஸ்ட் 9 அன்று நாகசாகியிலும் அமெரிக்கா அணுகுண்டுகளை வெடிக்கச் செய்தது. ஹிரோஷிமாவில் 80, 000க்கும் அதிகமானோர் மற்றும் நாகசாகியில் 70,000 பேர் இறந்ததாக நம்பப்படுகிறது.



அணுகுண்டு வெடிப்பு

**உலகில் இதுவரை இரண்டு முறை அணு குண்டுகள் போடப்பட்டு அவை பயங்கர சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.**

**இந்த இரண்டு தாக்குதல்களையும் 77 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா நடத்தியது. ஜப்பானின் இரண்டு நகரங்களின் மீது அது அணு குண்டுகளை வீசியது.**



முதல் அணுகுண்டு தாக்குதல் ஹிரோஷிமாவில் 1945, ஆகஸ்ட் 6 ஆம் தேதி நடந்தது

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1



காவியத் தொடர் 15





இந்த மகத்தான நிகழ்ச்சியினையெல்லாம் வைஷ்ணவ குரு பரம்பரைச் சரித்திரம் விபரமாகச் சொல்லட்டும் என்று விட்டு விட்டு, மறுபடியும் நாம் வந்தியத்தேவனைக் கவனிப்போம்.

பெருமாளைச் சேவித்துவிட்டு ஆலயத்துக்கு வெளியில் வந்ததும் வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "நம்பிகளே! தாங்கள் இத்தகைய பரம பக்தர் என்றும் பண்டித சிகாமண்ணி என்றும் எனக்குத் தெரியாமல் போயிற்று. ஏதாவது அபச்சாரமாக நான் பேசியிருந்தால் மன்னிக்க வேண்டும்" என்றான்.

"மன்னித்து விடுகிறேன் தம்பி! ஆனால் இப்போது எனக்கு ஒரு உதவி செய்வாயா, சொல்லு!"

"தாங்கள் கேட்கும் உதவி என்னால் முடியாது என்றுதான் சொன்னேனே? நீங்களும் ஒப்புக் கொண்டீர்களோ?"

"இது வேறு விடயம். ஒரு சிறிய சீட்டுக் கொடுக்கிறேன். கடம்பூர் அரண்மனையில் நீ தங்கினால் தக்க சமயம் பார்த்து ஒருவரிடம் அதைக் கொடுக்க வேண்டும்."

"யாரிடம்?"

"பழுவேட்டரையரின் யானைக்குப் பின்னால் மூடு பல்லக்கில் சென்றாளே, அந்தப் பெண்மணியிடம்!"

"நம்பிகளே! என்னை யார் என்று நினைத்தீர்கள், இம்மாதிரி வேலைக்கெல்லாம் நான்தானா அகப்பட்டேன்? தங்களைத் தவிர வேறு யாராவது இத்தகைய வார்த்தையை என்னிடம் சொல்லியிருந்தால்..."

"தம்பி! படபடப்பு வேண்டாம்! உன்னால் முடியாது என்றால் மகாராஜனாய்ப் போய் வா! ஆனால் எனக்கு மட்டும் இந்த உதவி நீ செய்திருந்தால், ஏதாவது ஒரு சமயத்தில் உனக்கும் என் உதவி பயன்பட்டி ருக்கும். பாதகமில்லை, போய் வா!"

வந்தியத்தேவன் பிறகு அங்கே ஒரு கணம்கூட நிற்கவில்லை. குதிரை மீது தாவி ஏறி விரைவாக விட்டுக் கொண்டு கடம்பூரை நோக்கிச் சென்றான்.

## நான்காம் அத்தியாயம்
## கடம்பூர் மாளிகை

இத்தனை நேரம் இளைப்பாறியிருந்த வல்லவரையனுடைய குதிரை இப்போது நல்ல சுறுசுறுப்பைப் பெற்றிருந்தது; ஒரு நாழிகை நேரத்தில் கடம்பூர்ச் சம்புவரையர் மாளிகை வாசலை அடைந்துவிட்டது.

அந்தக் காலத்துச் சோழ நாட்டுப் பெருங்குடித் தலைவர்களில் செங்கண்ணர் சம்புவரையர் ஒருவர். அவருடைய மாளிகையின் வாசல் ஒரு பெரிய நகரத்தின் கோட்டை வாசலைப் போல் இருந்தது. வாச லுக்கு இருபுறத்திலும் எழுந்த நெடுஞ்சுவர்கள் கோட்டைச் சுவர்களைப் போலவே வளைந்து சென்றன.

கோட்டை வாசலில் யானைகளும் குதிரைகளும் ரிஷபங்களும் அந்த மிருகங்களையெல்லாம் பிடித்துக் கட்டுவோரும் தீனி வைப்போரும் தண்ணீர் காட்டுவோரும் ஆங்காங்கு தீவர்த்தி தூக்கிப் பிடித்து வெளிச்சம் போடுவோரும் தீவர்த்திகளுக்கு எண்ணெய் விடுவோருமாக ஒரே கோலாகலமாயிருந்து.

இதையெல்லாம் பார்த்த வல்லவரையனின் உள்ளத்தில் சிறிது தயக்கமும் துடுக்கமும் ஏற்பட்டன. 'ஏதோ இங்கே பெரிய விசேஷம் ஒன்று நடைபெறுகிறது. இந்தச் சமயத்தில் நாம் வந்து சேர்ந் தோமே' என்று எண்ணினான். நடக்கும் விசேஷம் என்னவென்பதைப் பார்த்துத் தெரிந்த கொள்ளும் ஆவலும் ஒருபக்கம் பொங்கிக் கொண்டிருந்தது.

கோட்டை வாசற்கதவுகள் திறந்து தானிருந்தன. ஆனால் திறந்திருந்த வாசலில் வேல் பிடித்த வீரர்கள் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை பார்த்தால் யமகிங்கரர்களைப் போலிருந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

# நீல நிறப் பூ

வித்தியாநாதர் மாபெரும் பண்டிதர் அவர் தம் குருகுலத்தில் பத்து மாணவர்களை மட்டும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஓராண்டு காலம் படிப்பு சொல்லிக் கொடுத்து ஆண்டு முடிந்ததும் அவர்களை அனுப்பி விடுவார்.

ஓராண்டில் சிவபுரியைச் சேர்ந்த சிவராஜன் என்பவனோடு ஒன்பது பேர்கள் அந்த ஆச்சிரமத்தில் கல்வி பயிலத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒரு மாதமான பின் வித்தியாநாதர் தம் சீடர்களில் ரவீந்திரன் என்பவனுக்கு மட்டும் தனியாக தினமும் ஏதோ கற்பிப்பதை மற்ற மாணவர்கள் கவனித்தார்கள். ஒரு நாள் ஒன்பது சீடர்களும் ஒன்றாகத் தம் குருவை கண்டு "ஐயா! நீங்கள் ரவீந்திரனுக்கு மட்டும் தனியாக ஏதோ கற்பிக்கிறீர்கள். எங்களுக்கும் அவ்வாறு கற்பிக்கக் கூடாதா? எங்களிடம் ரவீந்திரனை விட அதிகத் திறன் இல்லை என்றா கருதுகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு வித்தியாநாதரும் "நம் கையில் ஐந்து விரல்கள் உள்ளன. ஆனால் அவை ஒன்று போல இல்லையே. அதுபோல என் சீடர்களிலும் வேறுபாடு உள்ளது. சிலர் சட்டென்று ஒரு தடவை சொன்னால் புரிந்து கொள்வார்கள். வேறு சிலருக்கு பலமுறை சொன்னால் தான் புரியும். ரவீந்திரன் முதல் ரகத்தைச் சேர்ந்தவன். அதனால்தான் மேலும் கற்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டுள்ள அவனுக்குத் தனியாக சொல்லிக் கொடுக்கிறேன்" என்றார்.



அதைக் கேட்ட அந்த சீடர்கள் வாயடைத்துப் போனார்கள். இப்படியாக ஒரு வருட காலம் கழிந்தது. சீடர்கள் குருகுலத்தை விட்டுப் போகிற நேரமும் வந்தது. அப்போது வித்தியாநாதர் பத்து விதைகளை எடுத்து உள்ளங்கைக்குள் வைத்து நன்றாகக் குலுக்கி ஆளுக்கு ஒரு விதையாகக் கொடுத்தார்.

அதன்பின் வித்தியாநாதர் "நான் இந்த விதைகளைப் பாரபட்சம் காட்டாமல் ஆளுக்கு ஒன்று வீதம் கொடுத்திருக்கிறேன். இவற்றை நட்டு செடியாக்குங்கள். இவற்றில் ஒரு விதையிலிருந்து முளைக்கும் செடியில் மட்டும் நீல நிறப் பூ பூக்கும். அந்த விதை இப்போது யாருக்கக் கிடைகத்திருக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால் அப்படிப் பூத்த மலரை அந்தச் சீடன் எடுத்து வந்து குருதட்சிணையாக எனக்குக் கொடுக்க வேண்டும். அதுதான் நீங்கள் கொடுக்கும் குருதட்சிணை" என்றார்.

சிவராஜனும் "குருவே! நீங்கள் கூறுவதைப் பார்த்தால் அந்த மலரில் ஏதோ சிறப்புத் தன்மை இருப்பதாகத் தெரிகிறது" என்றான். வித்தியாநாதரும் "ஆம் அதைமென்று தின்றால் மழை பெய்யப் போவதை முன் கூட்டியே தெரிந்து கொள்ளலாம். இந்த சக்தியை யார் வேண்டுமானாலும் அடைந்து விடலாம். ஆனால் எனக்கு மட்டும் இந்த சக்தி என் மாணவன் எனக்குக் கொடுக்கும் பூவினால் தான் கிடைக்கும். 'இது என் குருநாதரின் வாக்கு" என்றார்.

சீடர்கள் எல்லோரும் தமக்குக் கிடைத்த விதைகளை பத்திரமாக எடுத்துக் கொண்டு தத்தம் ஊர்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சிவராஜன் சிவபுரியை அடைந்ததும் தனக்குக் கிடைத்த விதையைத் தன் வீட்டு கொல்லைப் புறத்தில் நட்டான். சிவராஜன் வித்தியாநாதரின் குருகுலத்தில் படித்து விட்டு வந்திருக்கிறான் எனத் தெரிந்த பலர் அவனைக் கண்டு அவன் என்னென்ன படித்தான் என்று விசாரித்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> விதைத்துக் கொண்டே இரு முளைத்தால் மரம் இல்லையேல் உரம் .
>
> – சே குவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விவசாயப் புரட்சியை ஏற்படுத்த இளைஞர்கள் களமிறங்க வேண்டும்

நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் நலிவடைந்து போவதை ஏற்றுத்தானாக வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் மந்த நிலையில் இருப்பதன் விளைவு தனி மனிதப் பாதிப்பாகவே அமையும்.

இன்றைய சூழ்நிலையில் எந்தத் தொழில் முயற்சியையும் செய்ய முடியாதென்றளவில் பணச் செலவு உச்சமடைந்துள்ளது.

இதன் காரணமாக எத்தனையோ தொழில் முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்துவிட்டன.

இதற்கு மேலாக, தொழில் இழப்பு சீவனோபாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவுள்ளது.

இந்நிலையில் பஞ்சம், பசி என்பன தலைவிரித்தாடும். இதன்விளைவாக களவு, கொள்ளை என்பன மேலெழுவதுடன் சட்டவிரோதச் செயல்களும் தாராளமாகிவிடும்.

இதையும் கடந்து இலஞ்ச ஊழல் கட்டுக்கடங்காமல்போக, அரச நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யாமல் பொதுமக்களைத் துன்பப்படுத்துவர்.

ஆம்,மேற்குறித்த சம்பவங்கள் பொருளாதாரத்தில் நலிவடைந்த நாடுகளின் இயல்புகளாகும்.

இந்த இயல்புகள் முழுமை பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுக்கும் என்பதால், அதற்குள் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கான முயற்சிகளில் ஒவ்வொரு தனிநபரும் ஈடுபட வேண்டும்.

இதில் முதன்மையானது விவசாயப் புரட்சியை ஏற்படுத்துவதாகும்.

விவசாய முயற்சிகளில் மக்கள் ஈடுபடுகின்றபோது, விவசாய உற்பத்திகள் பெருகி உணவுப் பஞ்சம் நீங்கும்.

உணவுப் பஞ்சம் நீங்குவதானது அந்த நாடு மீண்டெழுவதற்கான அறிகுறியாக இருப்பதுடன் சட்டவிரோதச் செயல்களைக் கணிசமாகக் குறைப்பதாகவும் இருக்கும்.

இங்குதான் விவசாயப் புரட்சி எங்ஙனம் ஏற்பட முடியும் என்ற கேள்வி எழுகிறது.

உலகில் நடந்த அத்தனை புரட்சிகளின் பக்கபலமாக இருந்தவர்கள் யார் என்று ஆராய்ந்தால், இளைஞர்கள் என்பதே அதற்கான விடையாக அமையும்.

அதாவது எந்தவொரு விடயத்திலும் இளைஞர் சேனை களமிறங்க வேண்டும்.

உதாரணத்துக்கு ராஜபக்ஷவின் ஆட்சியை வேர் பிடுங்கி வெளியேற்றும் பணியை இளைஞர் படையே செய்து முடித்தது.

ஆக, இளைஞர்கள் இடம்பெறாத எந்த அமைப்பும் வெற்றி பெற்றதான வரலாறு இல்லை என்பதால், நாட்டில் விவசாயப் புரட்சி ஏற்பட, விவசாயச் செய்கையில் இளைஞர்கள் களமிறங்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய இளைஞர்கள் விரைந்து விவசாய முயற்சியில் தங்களை ஈடுபடுத்துவதுடன் ஊர்தோறும் இளைஞர்கள் அடங்கிய விவசாய அமைப்புகளை நிறுவி அதனூடு தத்தம் ஊர்களில் விவசாய எழுச்சியை – விவசாயப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.

உண்மை. இளைஞர்களை வழிப்படுத்துவதை விடுத்து, அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதைத் தவிர்த்து, பொருளாதாரத்தை முன்னேற்றுவதென்பது ஒருபோதும் சாத்தியமாகாது.

ஆகையால் இளைஞர்கள் மூலம் விவசாயப் புரட்சியை ஏற்படுத்தும் திட்டம் உடன் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

## எச்.ஐ.வி நோயாளர்களுக்காக இரகசிய இணையத்தளம்

எச்.ஐ.வி எயிட்ஸ் தொற்றுக்கான இரகசியமான மற்றும் அநாமதேய பரிசோதனையை இலவசமாகப் பெறுவதற்காக சுகாதார அமைச்சினால் know4sure.lk எனும் இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் இலங்கை தேசிய STD மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட விசேட வேலைத்திட்டத்தின் பிரகாரம் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளம் எயிட்ஸ் நோய்க்கான இலவச சுய பரிசோதனையை எளிதாக்குகிறது.

மேலும், அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டால், அவர்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனையும், இரகசியத்தன்மையும் பாதுகாக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும்.

தொலைபேசி மூலம் மருத்துவரை அணுகவும் இணையத்தளத்தைப் பயன்படுத்தலாம். சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் இந்த சேவை வழங்கப்படவுள்ளதாக தேசிய STD மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (4)

## 29 கொள்ளைச் சம்பவம் 10 வயது சிறுவன் கைது

(கொழும்பு)

29 கொள்ளை சம்பவங்கள் தொடர்பாக 10 வயது சிறுவன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக ஜா-எல பொலிஸ் நிலையத்தின் நீதிமன்ற விவகாரங்களுக்கான பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

மீன் விற்பனையில் ஈடுபடும் ஒருவர் தமது 9 ஆயிரத்து 700 ரூபா பணம் கொள்ளையிடப்பட்டமை சம்பந்தமாக செய்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொண்ட விசாரணைகளில் இந்த சிறுவன் தொடர்பான தகவல் கிடைத்துள்ளது.

ஜா-எல.ஏக்கல, விகாரை வீதியில் உள்ள வீடொன்றில் வசித்து வரும் சிறுவனிடம் மேற்கொண்ட விசாரணைகளில் 29 கொள்ளை சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் தெரியவந்துள்ளன.

சிறுவன் வீடுகளுக்குள் புகுந்து செல்போன்கள், முச்சக்கரவண்டி உதிரிப் பாகங்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்களை கொள்ளையிட்டுள்ளதுடன் 300 ரூபா முதல் ஆயிரம் ரூபா வரை கொள்ளையிட்டுள்ளார்.

சிறுவனிடம் பொலிஸார் மேலதிகமாக மேற்கொண்ட விசாரணைகளில் மீண்டும் பாடசாலைக்குச் செல்ல சிறுவன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஜா.எல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கு அமைய பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் பிரேமசிறி, பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் உத்பலா ஆகியோர் சிறுவன் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

## தென்கொரிய சம்பவம் ரணில் இரங்கல்

(கொழும்பு)

தென்கொரிய தலைநகர் சியோலில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய ஜனாதிபதி பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரிய தலைநகர் சியோலில் ஹலோவின் கொண்டாட்ட நிகழ்வின் போது, ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி 153 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில், 19 பேர் வெளிநாட்டவர் என்பதுடன், இலங்கையர் ஒருவரும் அடங்குகின்றார்.

அத்துடன் குறித்த நெரிசலில் சிக்கி மேலும் 82 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டியை சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவரே இந்த அனர்த்தத்தில் உயிரிழந்ததாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார். (4)

## டொலர் நெருக்கடி கிழக்கு முனையத்தின் நிர்மாணப் பணிகள் தாமதம்

(கொழும்பு)

டொலர் நெருக்கடி காரணமாக குறித்த நேரத்தில் பணம் செலுத்த முடியாமல் போனதால் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நிர்மாணப் பணிகளும் தாமதமாகியுள்ளது.

கிழக்கு முனையத்தின் நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்தி குறித்த நேரத்தில் முடிக்குமாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கொழும்பு துறைமுகத்தின் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில் அனைவரது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கவனத்தில் கொள்ளுமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

முன்பதிவு செய்யப்பட்ட 3 கிரேன்களை உடனடியாக பெறுவதன் மூலம் துறைமுக அதிகாரசபை வருமானத்தை ஈட்ட முடியும் என இந்த கலந்துரையாடலின் போது பேசப்பட்டுள்ளது. (4)

## இராணுவ சிப்பாய் நீரில் மூழ்கி பலி

(குருநாகல்)

குருநாகல் - எகெட்டுவ பிரதேசத்தில் குளத்தில் நீராடச் சென்ற இராணுவ சிப்பாய் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் 29 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 23 வயதுடைய கிரிகம்பமுனுவ, பொல்கஸோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிப்பாய் பனாகொட இராணுவ முகாமிலிருந்து அநுராதபுர முகாமிற்கு மேலும் சில சிப்பாய்களுடன் சென்ற போது, அங்கிருந்த குளமொன்றில் நீராடச் சென்றபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

## யால பூங்கா சம்பவம் வனவிலங்கு அமைச்சரின் உறவினர் கைது

கடந்த வாரம் யால பூங்காவில், வனவிலங்கு சட்டத்தை மீறி வாகனம் செலுத்திய சம்பவம் தொடர்பில், வனஜீவராசிகள் அமைச்சர் மகிந்த அமரவீரவின் நெருங்கிய உறவினர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், அமைச்சர் மகிந்த அமரவீரவின் சகோதரரின் மகனான துலித நுவான் அமரவீர என்பவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் திஸ்ஸமஹாராம நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, தலா 500,000 ரூபா அடங்கலான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.(4)

## போலி ஆவணங்கள் தயாரித்த இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு - பொரளை பிரதேசத்தில் போலி ஆவணங்களை தயாரித்த இருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் 47 மற்றும் 64 வயதுகளை உடைய, கொழும்பைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இதன்போது போலி இறப்பர் முத்திரைகள், போலி ஆவணங்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கணினிகள் ஆகியவையும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில்பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணடைந்த குழந்தைகள் எங்கே?

## வவுனியாவில் உறவுகள் போராட்டம்

(நெளுக்குளம்)

**வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



குறித்த போராட்டமானது வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்றிருந்தது.

கொலையாளி ஜனாதிபதியாய் உள்ள நாட்டில் எமக்கு எப்படி நீதி கிடைக்கும் ,குடும்பங்களாக சரணடையும் போது அவர்களுடன் சேர்ந்து சரணடைந்த 29 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் எங்கே? , யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களை காணாமல் ஆக்கப்பட்டோர் என அவர்களின் குடும்பத்தையும் ஏமாற்றுகின்றது போன்ற பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-299)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு சிரமதானப் பணிகள்



(தருமபுரம்)

கிளிநொச்சி தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நிகழ்வை முன்னிட்டு இந்த சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதில் பெற்றோர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-316)


# இதய அஞ்சலி




எமது பல்கலைக்கழக நண்பனும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளருமான **சிவராமலிங்கம் சிவதரன்** அவர்களின் அன்புத் தாயார்

**அமரர். சிவராமலிங்கம் மகேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-5184) **ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!**

**பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்**
**யாழ்.பல்கலைக்கழக 95/96 நண்பர்கள்.**

யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று வாசிப்பு மாதத்தையொட்டி யாழ்.மாநகரசபையின் ஏற்பாட்டில் யாழ். பொது நூலக அணியினரால் மாணவர்களின் நலன் கருதி நூல்களின் வாசிப்பினை ஊக்குவிக்க நடமாடும் சேவையினையும் போதை தொடர்பான விழிப்புணர்வு நாடக ஆற்றுகையினையும் சிறுவர்களுக்கான கதைகளுடனான அறிவுரையினையும் வழங்கியிருந்தனர்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 480 | 500 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 230 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 250 | 250 |
| தக்காளி | 280 | 300 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 200 |
| கோவா | 340 | 280 | 300 | 400 |
| கரட் | 350 | 400 | 400 | 450 |
| பூசணி | 200 | 200 | 200 | 200 |
| புடோல் | 250 | 250 | 180 | 200 |
| வாழைக்காய் | 180 | 160 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 450 | 600 |
| பெரிய வெங்காயம் | 260 | 250 | 250 | 280 |
| பாகற்காய் | 800 | 800 | 750 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 650 | 800 | 800 | 700 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 280 | 250 | 300 | 300 |
| கறிமிளகாய் | 650 | 850 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 500 | 400 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 300 | 380 |
| கீரை - 1 பிடி | 140 | 150 | 120 | 180 |
| தேசிக்காய் | 800 | 650 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 260 | 250 | 220 | 250 |
| வெங்காயப்பூ | 650 | 400 | -- | 480 |
| முள்ளங்கி | 160 | 150 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 50 | 40 |
| ஈரப்பலா | 120 | 150 | 100 | 140 |

# அரசியல் தீர்வு கோரி

## 90 ஆவது நாளாக போராட்டம்



(மன்னார்)

வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 90 ஆம் நாள் கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச ஸ்கந்தபுரம் சந்தியில் நடைபெற்றது.

இதன் போது பிரதேசத்தின் விவசாய சங்கத்தினர், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் இணைந்து எமக்கு நிரந்தர மான அரசியல் உரிமை வேண்டும், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை என கோசங்களை எழுப்பியவாறு ஸ்கந்தபுரம் பொதுச்சந்தை முன்பாக தங்களின் உரிமை சார்ந்த கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

குறித்த போராட்டம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சி யாக சுழற்சி முறையில் 100 நாட் கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-285)

# சுண்ணாம்புக்கல் அகழ்வு

## மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதுடன் மூன்று டிப்பர்கள் மற்றும் ஒரு பெக்கோ இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறுப்பிட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணாம்புக்கல் அகழ்வு இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் அகழ்வில் ஈடுபட்ட வாகனங்களை கைப்பற்றியதுடன் கைது செய்யப்பட்ட மூவரையும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். (4-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர்...

பட்டுள்ளது.

அமைச்சர்களின் வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயங்களை ஏற்பாடு செய்ய வேண்டாம் என்றும், சம்பந்தப்பட்ட விடயங்களை இராஜதந்திர பணிகள் மூலம் கையாளலாம் என்றும் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4)

## மது அருந்துவோ...

டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்துள்ளார்.

மதுபானத்திற்கு அடிமையானவர்களை மீட்பதற்கு புனர்வாழ்வு மையமொன்று உருவாக்கப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ், குறித்த குழுவிடம் கோரியுள்ளார். (4)

## தேநீர், சில...

10 சதவீதத்தால் குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், இதற்காக அத்தியாவசிய உணவுப் பொருட்கள், குறைவடைந்துள்ள விலையில் உணவக உரிமையாளர்களுக்குக் கிடைக்கப்பெற வேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்தார். (4)

## தவறான...

ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வீட்டில் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார்.

29வயதான இளைஞன் ஒருவரே இவ்வாறு அவரது வீட்டில் தூக்கிட்டுள்ளார். இதனை அவதானித்த உறவினர்கள் உடனடியாக இளைஞனை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவரது உயிர் ஏற்கனவே பிரிந்திருப்பதாக வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர்.

உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-30)

## வீதியால் சென்ற...

கொண்டிருந்த குரவில் உடையார் கட்டுப்பகுதியினைச் சேர்ந்த வியாபாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4)

## இலங்கையர்...

ஹிஸ்மாயில் முனவ்ஃபர் என்ற 27 வயதான ஆண் ஒருவரென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ஏற்பட்ட இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 153 ஆக அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஹாலோவீன் கொண்டாட்டத்துக்காக நகரின் பிரபலமான இரவு வாழ்க்கைப் பகுதியான Itaewon இல் பெரும் கூட்டம் கூடியதால் மக்கள் நெரிசல் ஏற்பட்டது.

அதேவேளை, ஹாலோவீன் பண்டிகையின் போது ஏற்பட்ட பேரழிவுக்கு தமது சோகத்தை தெரிவித்துள்ள தென் கொரியாவின் அதிபர் யூன் சுக் யோல் தேசிய துக்கதினமாக பிரகடனம் செய்துள்ளதாக தென் கொரிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (4)

## எதிர்வரும்...

வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இலங்கையைச் சூழவுள்ள பகுதிகளில் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் வலுவடைந்து வருவதன் காரணமாக இவ்வாறு மழையுடனான வானிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (4)

## கடல் அலையில்...

காணாமற்போன இளைஞரின் சடலம் கொக்குளாய் கடற்கரையில் நேற்று காலை கரைஒதுங்கியது. (4)

## சுமந்திரனின்...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் தமிழ்க் கூட்டமைப்பில் இருக்கின்ற ஒருவரின் முடிவை தமிழ்க் கூட்டமைப்பின் முடிவாக ஏற்றுக்கொள்ள முடியாது.

நான் தமிழரசுக் கட்சியில் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக அங்கம் வகிக்கின்ற நிலையில் தமிழரசு கட்சியினுடைய தலைவர் மாவை சேனாதிராஜா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஆகியோரிடம் எவ்விதமான சலுகைகளையும் இதுவரை கேட்டதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நான் உதவி செய்துள்ளேன் எந்தவிதமான சலுகைகளையோ பதவிகளையோ கேட்டுப் பெற்றுக்கொண்டதில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் முடிவுகளை எடுக்கும்போது கூட்டுப் பொறுப்பு காணப்படுவதில்லை மாறாக ஒருவர் முடிவெடுத்து விட்டு அதனைச் செய்யும்படி கூறுவது தான்தோன்றித்தனமான செயலாகும்.

அண்மையில் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற 22 ஆவது திருத்தத்தின் போது சுமந்திரன் வாக்களிப்பிலிருந்து விலகி இருந்தார் அதற்கு காரணத்தையும் ஊடகங்களுக்கு கூறி இருந்தார்.

அதே சுமந்திரன் கடந்த ஒரு வாக்களிப்பின் போது வாக்களிக்க முடியாதவர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள் என கூறி இருந்தார்.

நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன் சுமந்திரன் நினைக்கிறார் தான் எடுக்கும் முடிவுகளுக்கு ஏனையோர் வாக்களிக்க வேண்டும் கட்சி எடுக்கும் முடிவுகளுக்கு மட்டும் தான் வாக்களிக்க முடியாது என எண்ணுகிறார் போலும்.

இவ்வாறு பல்வேறு சந்தர்பங்களில் தனி ஒருவர் எடுக்கும் முடிவுகள் கட்சிக்குள் பாதிப்பை ஏற்படுத்திவரும் நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்திற்கு தமிழ்த் தேசியம் சார்ந்த ஒருவர் தலைவராக வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து விலகிதேசிய அரசியலுக்கு சென்று கொண்டிருப்பது மண்ணையும் மக்களையும் அழிக்கும்ஒரு செயற்பாடாகும் எனவும் தெரிவித்தார். (4-104)

## அரசியல்...

குறித்த சந்திப்பில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அண்மையில் விடுவிக்கப்பட்ட நிலையில் எஞ்சியுள்ள 34 பேரையும் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டையே பின்பற்றிவருகிறோம்.

அண்மையில் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் சிறைச்சாலையில் உள்ளவர்களின் வழக்கு நிலைமைகள் தொடர்பில் சட்டமா அதிபருடன் தொடர்ந்து கலந்துரையாடி விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் அறிவித்தார்.

குறித்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் வாகீசன் மற்றும் அமைச்சர் விஜயதாச ராஜபக்சவின் நண்பர் கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-104)

மஹஜன சம்பத
திகதி 2022/10/30
சீட்டிழுப்பு இலக்கம் 4924
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
H 9 5 9 4 3 8
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.30
சீட்டிழுப்பு இலக்கம் 233
விருச்சிகம் 21 41 46 60 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1272
E 13 03 15 21 28

கொவிசெத
திகதி 2022.10.30
சீட்டிழுப்பு இலக்கம் 3166
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
E 16 45 50 72
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.10.30
சீட்டிழுப்பு இலக்கம் - 954
V 19 26 48 56
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1379
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 3 6 9 5 7 1
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1725
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.30
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,765,020/-
வெற்றி இலக்கங்கள் 30 59 62 77 ஆங்கில எழுத்து G
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.30
சீட்டிழுப்பு இல : 4060
வர்ணம் : இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,637,540/-
வெற்றி இலக்கங்கள் 19 21 61 65 ஆங்கில எழுத்து G
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
சீட்டிழுப்பு வாரம் 242
சீட்டிழுப்பு திகதி 2022.10.30
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 17 18
09
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,761,780/-
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,504,265/-
திகதி 2022-10-30
வெற்றி வாரம் 3611
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 04 27 34 42 விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,740,200/-
அபிவிருத்தி லொத்தர் சபை

லக்கி 7 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 26 10 35 44 62
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1075
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.10.30 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 273,386,321.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1899
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.10.30
தினம் ஞாயிற்றுக்கிழமை
A 05 18 33 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,882,560/-
அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலம் அறுந்து விழுந்ததில் இந்தியாவில் 40 பேர் பலி

(அகமதாபாத்)

குஜராத்தின் மோர்பி நகரில் கட்டப்பட்ட கேபிள் பாலமொன்று திடீரென இடிந்து விழுந்துள்ளது.

குறித்த பாலத்தினை பழுது பார்க்கும் பணிகள் சமீபத்தில் நடந்து முடிந்த நிலையில் கடந்த 26 ஆம் திகதி மீண்டும் பாலம் திறக்கப்பட்டு பொது பயன்பாட்டுக்கு விடப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று 500க்கும் மேற்பட்டோர் பாலத்தில் இருந்தபோது, திடீரென பாலம் இடிந்து விழுந்துள்ளது.

இந்த சம்பவத்தில் 40 பேர் உயிரிழந்துள்ளதுடன், 30 இற்கும் மேற்பட்டோர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இருப்பினும் ஏராளமானவர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளதுடன் பொதுமக்கள், தீயணைப்பு வீரர்கள், பொலிஸார் எனப் பலரும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.2 இலட்சமும் காயமடைந்தோருக்கு ரூ.50 ஆயிரமும் வழங்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார். (4)

# அரசுக்கு சொந்தமான காணிகளில் உற்பத்தி நடவடிக்கை - பிரதமர்

(கொழும்பு)

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பயன்படுத்தப்படாத அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளை இளைஞர்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கு உற்பத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வறுமையிலிருந்து மீள்வதற்கு நாட்டின் உணவுப்பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்த பிரதமர், நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சகலரும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

உலகளாவிய ரீதியில் உணவு நெருக்கடி நிலவுவதனால் சில நாடுகள் உணவு பொருள் ஏற்றுமதியினை வரையறுத்துள்ளது. இலங்கையில் உணவுப்பொருட்களை உற்பத்தி செய்து கொள்ள முடியும். உணவு பாதுகாப்புக்காக பிரதேச அபிவிருத்திகுழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கும் அரசாங்கம் தயாராக இருப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (4)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!
கடந்த 04.10.2022
செவ்வாய்க்கிழமை
அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் ஞானசுந்தரம் உதயசங்கர் (மோகன்)**
(மோகன் சவுண்ஸ் உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 01.11.2022 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 03.11.2022 வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.26, பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (13309)

இங்ஙனம்:- குடும்பத்தினர் 077 077 6234


# மாவடியில் வாள்வெட்டு; இருவர் மருத்துவமனையில்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடி அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் நேற்று மாலை வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த வாள்வெட்டில் இருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (4-104)


**அமெரிக்க லொத்தர் இலவச விசா**
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை | 55'000 விசாக்கள் இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

இன்னும் ஏழு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

இந்த வருடம் வருக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எம்மூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours எனும் Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-5159)

**V2 Travels** 0768226240 0768226244



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13267)

076 825 7716 (ஆகாஸ்)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

(13306)

தொடர்புகளுக்கு - ஜெயம்
077 986 5457, 077 814 7389



## பிறந்தநாள் நினைவலைகள்



பிறப்பு 31.10.1974
இறப்பு 02.04.2021

அமரர் **வேலுப்பிள்ளை அன்பழகன்**

**நினைவினில் மலர்வாய் நிதமும்**

தென்றலாய் வந்தாய்
தேன்மது சிந்தும் வாழ்வில்
குன்றென நின்ற கோகுல வாசனே
பண்பென உலகு பரிந்திடு மொழியால்
என்றுமே எம்மன துயிராய்
மைந்தரும் உறவும் வாடிடு துயரில்
தோன்றிடா துணையென நின்று
தேற்றிடப் பிறந்த செல்வமே – என்றும்
நினைவினில் மலர்வாய் நிதமும்

(13305)

இல.42/6, சிவகுருநாதர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் ஆறாத் துயரில்:
குடும்பத்தினர்



## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **நவரத்தினம் புண்ணியமூர்த்தி**

மண்ணில்: 24.02.1941
விண்ணில்:- 15.11.2018

பாசத்தின் இருப்பிடமே!
பண்பின் பிறப்பிடமே!
அன்பின் உறைவிடமே!
எங்கள் அன்புத் தெய்வமே!
நான்கு வருடங்கள் கழிந்தாலென்ன
நாலாயிரம் ஆண்டுகள் போனாலென்ன
தந்தையே உங்கள்
அன்பு முகம்தான் மறைந்திடுமா?

வைரவர் கோவில் வீதி,
[illegible] கிழக்கு,
[illegible] கரவெட்டி. (13286)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.